**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 376/2017 |
| Preliminary register | |
| Sessions | |
| | Prosecution PW 4 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | திரு. கதிரேசன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of July 2026.

நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்று தற்போது கன்னியாகுமரி மாவட்டம் அருமநல்லூாில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 14.08.2016 ஆம் தேதி 11.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருக்கும்போது மூலைக்கரைப்பட்டி காவல்நிலைய எஸ்எஸ்ஐ முருகன் நிலையத்தில் ஆஜராகி ஒரு தனியறிக்கையும், அத்தாட்சியும் சொத்துக்களையும், எதிரிகள் சரவணகுமார், செந்தில்குமார் ஆகியோர்களை என்னிடம் ஒப்படைத்தார்கள். நான் அதை பெற்று அதன் தன்மைகேற்ப குற்ற எண். 102/2016 இதச பிரிவுகள் 354, 506(2), 379 (Sand theft) மற்றும் 21(1), (4) MMDR என்ற வழக்கை பதிவு செய்தேன். முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.5** ஆகும்.

தனியறிக்கை மற்றும் அத்தாட்சியை அசல் தகவலறிக்கையுடன் இணைத்து கனம் நான்குநேரி நீதிமன்றம் அனுப்பியும் சம்மந்தப்பட்ட நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், விசாரணை நகலை

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.10 17:56:35 +0530

நான்குநேரி வட்ட ஆய்வாளர் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 14.08.2016ம் தேதி 14.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறங்களையும் சாட்சிகள் ஐயப்பன், முத்துகிருஷ்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.6** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.7** ஆகும்.

பின்பு சாட்சிகள் சிறப்பு உதவி ஆய்வாளர் முருகன், தலைமை காவலர்கள் ஜெயகுமார், முத்துகிருஷ்ணன், பார்வை மகஜர் சாட்சிகளான ஐயப்பன், முத்துகிருஷ்ணன் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார். இந்த வழக்கில் இதச பிரிவு குற்றங்கள் மற்றும் புலனாவது தெரிந்ததால் விசாரணைக்காக வழக்கு கோப்பை என்னிடம ஒப்படைத்தார். உத்தரவுபடி வழக்குகோப்பை பெற்றுக்கொண்டு 18.11.2016ம் தேதி சம்பவயிடம் சென்று பார்வையிட்டத்தில் ஆய்வாளர் தயார் செய்த மாதிரிவரைபடம், பார்வை மகஜர் சரியாக இருந்ததால் நான் புதிதாக பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்யவில்லை. காவல் ஆய்வாளர் விசாரித்த சாட்சிகளை நான் விசாரித்தபோது அவர்கள் அனைவரும் காவல் ஆய்வாளரிடம் கூறியதுபோல என்னிடம் கூறியதால் நான் தனியாக புதிதாக வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை.

வழக்கிற்கு பயன்படுத்தப்பட்ட TN 74 – 480 மகேந்திரா நிசான் டெம்போவை சிறப்பு உதவி ஆய்வாளர் முருகன் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றியதை படிவம் 91ன் மூலம் நீதிமன்ற பாதுகாப்புக்கு அனுப்பிவைத்தேன். படிவம் 91 **அ.சா.ஆ.8** ஆகும். வழக்கில் கைப்பற்றப்பட்ட மணலை அரசுக்கு சேர்க்கும்விதமாக பொதுப்பணித்துறையில் ஒப்படைத்தேன். அந்த கடிதம் **அ.சா.ஆ.9** ஆகும்.

எதிரிகள் சரவணகுமார், செந்தில்குமார் ஆகியோர்களை உச்சநீதிமன்ற கட்டளைகளை அனுசரித்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டது. மற்றொரு எதிரியான மகாதேவன் மாண்புமிகு திருநெல்வேலி முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்று நீதிமன்றத்தில் சரணடைந்து பின் வெளியே சென்றுள்ளார்.

புகாரின் அடிப்படையில் புலன் விசாரணையிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையிலும் எதிரிகள் குற்றபுரிந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரிகள் மீது இதச பிரிவு 379 ன் படி நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

BOOMINATHAN
Digitally signed by BOOMINATHAN
Date: 2026.07.10 17:56:48 +0530

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் பொய்யான தகவலின் அடிப்படையில் எதிரிகள் மீது குற்றபத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எந்த சொத்துக்களை கைப்பற்றினேன் என்றால் டெம்போ மற்றும் மணலை கைப்பற்றினேன். எத்தனை யூனிட் மணல் என எனது விசாரணையில் துலங்கும் என்றால் 1யூனிட் மணல். மேற்படி மணலின் அளவு முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ரூ.3000 மதிப்புள்ள மணல் என குறிப்பிடப்பட்டுள்ளது. கைப்பற்றிய மணலை யாரிடம் ஒப்படைத்தேன் என்றால் பொதுப்பணித்துறை மூலம் அரசுக்கு ஒப்படைத்தேன். மணலை ஒப்படைத்ததற்கான ரசீது கொடுத்தார்களா என்றால் கொடுத்துள்ளார்கள். வரைபடம், அத்தாட்சி, பார்வை மகஜர் நான் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் எதிரிகள் எந்த குற்ற செயலிலும் ஈடுபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கானது புள்ளிவிபர கணக்கிற்காக பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.10 17:56:53 +0530